මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission

மැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இலக்கம் : LAE/2025/71** **2025.04.25**

# உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06

## தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கை அளிப்பதற்காக விடுமுறை வழங்குதல்

தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கையளிப்பதற்காக விடுமுறை வழங்குவது தொடர்பான உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 84அ ஆம் பிரிவின் ஏற்பாடுகள் தொழிலாளர்களினதும் தொழில்தருநர்களினதும் தகவலுக்காக இங்கு கீழே காட்டப்பட்டுள்ளது.

> **“84அ(1) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தேர்தலில் வாக்களிப்பதற்கு உரித்துடைய ஆளொருவரை வேலைக்கமர்த்தியவராகவிருக்கின்ற எவ் ஆளும், அத்தகைய ஆளினால் அதற்காக எழுத்து மூலம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், அத்தகைய ஆள் அத்தேர்தலில் வாக்களிப்பதை இயலச் செய்வதற்காக வேலைக்கமர்த்திய அவ் ஆள் போதியதெனக் கருதக்கூடிய தொடர்ச்சியான காலத்திற்கு (அக்காலம் இரண்டு மணித்தியாலங்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும்.) சம்பள இழப்பை ஏற்படுத்தாத லீவை அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும்.**
>
> **(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவ் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் எவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினாற் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு மாத காலத்திற்கு மேற்படாத காலத்திற்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டணைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.”**

02. மேற்கூறப்பட்ட பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தனது வாக்கையளிப்பதற்காக விடுமுறை கோரி எழுத்து மூலம் விண்ணப்பம் செய்கின்ற எல்லா ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கும் விடுமுறைக் காலம், அமைய ஊழியர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விசேட விடுமுறையொன்றாக கருதப்பட வேண்டியதுடன், அது ஊழியர்களின் சாதாரண லீவுகளிலிருந்து புறம்பானதாகவிருக்க வேண்டும்.

03. இவ்விடயம் தொடர்பாக ஊழியர்களுக்கு வழங்கப்படும் விடுமுறைக் காலத்தை, அந்த ஊழியர் தொழில் புரியும் இடத்திலிருந்து அவரது வாக்கெடுப்பு நிலையத்திற்கு போகவும் அங்கிருந்து திரும்பி வரவும் உள்ள தூரத்தை கருத்திற் கொண்டு, தொழில்தருநரால் தீர்மானம் செய்ய வேண்டும். சட்டத்தின்படி லீவு பெற்றுக் கொள்வது தொடர்பாக இதற்கு முன்பு நடைபெற்ற தேர்தல்களின் போதும் ஊழியர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதனால், இவ்வாக்கெடுப்பின் போது வாக்களிக்க உரித்துள்ள தனது ஊழியர்களுக்கு, சட்டத்தின் கீழ் உரிமையுள்ள இவ்விடுமுறையை தனியார், அரசாங்க துறைகளிலுள்ள தொழில்தருநர்கள் தமது தாபனத்தில் தொழில்புரியும் ஊழியர்களுக்கு வழங்குமாறு தேர்தல் ஆணைக்குழு கேட்டுக் கொள்கின்றது.

04. மேற்கூறப்பட்ட உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் 2025 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 7.00 மணி முதல் பி.ப 4.00 மணிவரை நடாத்தப்படும்.

05. இது தொடர்பாக சகல தொழில்தருநர்களிடமிருந்தும் கிடைக்கும் ஒத்துழைப்பு மிகவும் மெச்சப்படும்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்